# பிற்சேர்க்கை 2

# சத்திய வசனத்தைச் சரியாகக் கையாள கற்றலில் உதவிகள்

> *"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதை யாயிரு" (2 தீமோ. 2:15).*

*சத்திய வசனத்தை(வேதாகமத்தை)ச் சரியாக கையாளுவது மிகவும் முக்கியமானதாகும். இதன்பொருள், மற்றவைகளுடன் கூட, பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் உள்ள வேறு பாட்டைப் புரிந்து கொள்வது என்பதாகும். பழைய ஏற்பாடு நிழல், புதிய ஏற்பாடு நிஜம் (எபி. 10:1). பழைய ஏற்பாடு "சிலுவையில் அறையப்பட்டுள்ளது", புதிய ஏற்பாடே இப்பொழுது நம்மை ஆவிக்குரிய முறையில் கட்டுப்படுத்துகின்றது (கொலோ. 2:14). தேவன் தமது வாக்குத்தத்தங்களை எவ்விதம் எப்போதும் காத்துக் கொள்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளதால் பழைய ஏற்பாடு மதிப்புமிக்கதாகும் (1 கொரி. 10:6). பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன, அவைகள் புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட்டன. (அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணையைப் படிக்கவும்.)*

**சத்திய வசனத்தைச் சரியாகக் கையாளுதல் (2 தீமோ. 2:15)**

| *பழைய ஏற்பாடு* | *புதிய ஏற்பாடு* |
|---|---|
| ***ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்கள்*** *(ஆதி. 3:15; 12:3)* | ***நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தங்கள்*** |
| *1. இராஜ்யம் நிலைநாட்டப் படுதல் (தானி. 2:44)* | *மாற். 9:1; அப். 1:8; 2:1-4; லூக். 22:29, 30; 1 கொரி. 11:23* |
| *2. கர்த்தருடைய வீடு கட்டப் படுதல் (ஏசா. 2:2, 3)* | *எபி. 10:21; 1 தீமோ. 3:15* |
| *"கடைசி நாட்களில்" நடக்கும்* | *அப். 2:16-17; எபி. 1:1, 2* |
| *எருசலேமில் துவங்கும்* | *லூக். 24:46, 47; அப். 1:4-8* |
| *எல்லா நாட்டவரும் அனுமதிக்கப்படுவார்கள்.* | *அப். 2:9; ரோமர் 1:16* |
| *3. கிறிஸ்து இராஜாவா யிருப்பார் (எரே. 23:5, 6)* | *மத். 28:18; அப். 2:29-33* |
| *4. புதிய உடன்படிக்கை கட்டுப் படுத்தும் (எரே. 31:31)* | *மத். 16:18, 19; அப். 2:36-38; எபி. 9:15-17* |
| *5. பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல் (யோவே. 2:28)* | *அப். 2:16-21* |

*சபையைப் பற்றிச் செய்யப்பட்ட எல்லா வாக்குத்தத்தங்களும் அப். 2ல் நிறைவேற்றப்பட்டன, இதில் ஒரு நாள் பெந்தெகொஸ்தே நாளன்று நடந்த நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*அப். 2க்கு* ***முன்னால்,*** *ராஜ்யத்தைப்பற்றி கூறும் ஒவ்வொரு வசனமும், அது* ***எதிர் காலத்தில்*** *வரப்போவதாகவே கூறுகின்றன (ஏசா. 2:2-4; மீகா 4:1, 2; தானி. 2:44; மத். 3:1, 2; 6:9, 10; 16:18; மாற். 9:1).*

**அப். 2: பெந்தெகொஸ்தே**

*அப். 2க்குப்* ***பிறகு*** *இராஜ்யத்தைப் பற்றிக்கூறும் ஒவ்வொரு வசனமும், அது* ***இருப்பதாகவே*** *கூறுகின்றன (அப். 2:47; கொலோ. 1:13, 14).*

## புதிதான உள்ளூர் சபை ஒன்றை வேதாகமத்தின்படியாக அமைப்பது எவ்விதம்

***சுய ஆளுகை பெற்ற ஒரு அமைப்பாக*** - *கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு உள்ளூர் சபையும் ஒரு தனிப்பட்ட, சுய ஆளுகையுள்ள அலகு ஆகும். எந்த ஒரு உள்ளூர் சபையும், இன்னொரு உள்ளூர் சபைக்கு மேலானதாக எப்பொழுதுமே இருப்பதில்லை. சபைகளின் கூட்டமைப்பு என்று ஒன்றும் இருப்பதில்லை, மற்றும் உள்ளூர் சபையைவிடப் பெரிதான வேறொரு அமைப்பு எதுவும் இல்லை.*

***கிறிஸ்துவின் சரீரமாக*** - *வேதாகமத்தில், சபையானது "கிறிஸ்துவின் சரீரம்" என்று அழைக்கப்படுகிறது. இவ்வுருவகக் கூற்றில் கிறிஸ்துவே "சரீரத்தின் தலையாக" இருப்பதை நாம் காணுகின்றோம் (கொலோ. 1:18; எபே. 1:22). இயல்பான உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு பணி இருப்பது போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும் உள்ளது. சபையின் எந்த ஒரு உறுப்பினரும், இன்னொரு உறுப்பினரைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராக இருப்பதில்லை. அனைவரும் தத்தமது இடத்தைப் பெற்று, முழு சரீரமாகிய சபையின் நலனில் தங்களது பங்கை நிறைவேற்றுகின்றனர்.*

***இயேசு ஒருவரே தலைவராக*** - *கிறிஸ்துவே "சபையின் தலைவராக" இருக்கிறார், அவர் சகல அதிகாரமும் பெற்றிருக்கிறார் (மத். 28:18). சபையின் அமைப்பை எவ்வழியிலும் மாற்றுவதற்கு எவரொருவரும் அனுமதிக்கப் படுவதில்லை, ஏனெனில் அவ்வாறு செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை.*

***மூப்பர்களின் வழி நடத்துதலின் கீழ் செயல்படுதல்*** - *ஒரு உள்ளூர் சபையானது எண்ணிக்கையிலும், ஆவிக்குரிய மனப்பக்குவத்திலும் வளர்ச்சியடையும்போது, அவ்வுள்ளூர் சபையிலிருந்து மனிதர்கள், மூப்பர்களாகப் பணிபுரிவதற்காக நியமிக்கப்பட வேண்டும். இம்மனிதர்கள் அவ்வுள்ளூர் சபையாராலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; அவர்கள் தாங்களாகவே சுயநியமனம் செய்து கொள்ள முடியாது. மூப்பர்கள், "மேய்ப்பர்கள்" என்றும் அழைக்கப்படுகின்றனர், அவர்கள் மந்தையைக் கண்காணிப்பவர்களாக ஊழியம் செய்கின்றனர் (1 பேது. 5:1-5). மூப்பர்களுக்கான தகுதிகள் 1 தீமோ. 3:1-8 மற்றும் தீத்து 1:5-8 ஆகிய வசனப்பகுதிகளில் காணப்படுகின்றன. மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்கள்*

*நியமிக்கப்படாமலேயே சபையானது நிலைநாட்டப்படலாம். முதலில், இவர்கள் இல்லாமலேயே சபையானது இருக்க வேண்டும், ஏனெனில் இப்பொறுப்பில் பணிபுரிய நியமிக்கப்படுகிறவர்கள் அநேக ஆண்டுகள் அனுபவத்தின் மூலம் இப்பணிக்கேற்ற தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

**பணிபுரிய நியமிக்கப்பட்ட உதவிக்காரர்களோடு** *- உள்ளூர் சபையில் பணிபுரிய, மனிதர்கள் உதவிக்காரர்களாகவும் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள், மூப்பர்களின் கீழ் பணிபுரிகின்றனர் (பிலி. 1:1; அப். 20:28). இவர்களுக்கான தகுதிகள் 1 தீமோ. 3:8-13ல் காணப்படுகின்றன.*

### கிறிஸ்தவ ஆண்

*அநேக வழிகளில், கிறிஸ்தவப் பெண்களுக்கு உள்ள அதே பொறுப்புகளை கிறிஸ்தவ ஆண்களும் பெற்றிருக்கின்றனர். இரு சாராருமே சபை ஆராதனை முறைமைகளில் விசுவாசத்துடன் பங்கேற்க வேண்டும் (எபி. 10:25), தாராளமாய்க் கொடுக்க வேண்டும் (1 கொரி. 16:2), பரிசுத்தமான வாழ்க்கை நடத்த வேண்டும் (யாக். 1:27). நற்செய்திப் பணிபுரிய வேண்டும் (மத். 28:19, 20), வேதாகமத்தைப் படிக்க வேண்டும் (2 தீமோ. 2:15; அப். 17:11ஐக் காணவும்), மற்றும் ஆவிக்குரிய முறையில் வளர வேண்டும் (1 பேது. 2:2).*

## கிறிஸ்தவ மனிதர் செய்யக் கூடாதவை என்ன:

1. *அவர் தமது மனைவி மற்றும் பிள்ளைகளைத் தகாத முறையில் நடத்தக்கூடாது (எபே. 5:25-31; 1 பேது. 3:7; 1 தெச. 2:11, 12).*
2. *அவர் வன்முறையாளராய் இருக்கக் கூடாது (ரோமர் 12:18).*
3. *அவர் வேசித்தனம் செய்கிறவராய் இருக்கக் கூடாது (1 கொரி. 6:18, 19).*
4. *அவர் சுகபோகப் பிரியராய் இருக்கக் கூடாது (2 தீமோ. 3:4; தீத்து 3:3).*
5. *அவர் உணர்வற்றவராகவோ அல்லது மனஎழுச்சியற்றவராகவோ இருக்கக் கூடாது (லூக். 22:62; யோவா. 11:35; அப். 20:37).*

## கிறிஸ்தவ மனிதர் செய்ய வேண்டியவைகள் என்ன:

1. *அவர் கர்த்தருடைய சபையில் வழிநடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்பவராய் இருக்க வேண்டும் (1 தீமோ. 2:8-15; 1 கொரி. 14:33, 36).*
2. *அவர் தமது குடும்பத்தை அன்புடன் வழிநடத்துபவராக இருக்க வேண்டும் (எபே. 5:21-33; கொலோ. 3:18-21; 1 பேது. 3:1-6; 1 கொரி. 11:2-5).*
3. *அவர் தமது குடும்பத்தின் ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்பவராய் இருக்க வேண்டும் (1 தீமோ. 5:8).*
4. *அவர் தமது பிள்ளைகள் சரியான முறையில் வளர்க்கப் படுகிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்பவராய் இருக்க வேண்டும் (எபே. 6:4).*

**ஆண்களுக்கு புதிய ஏற்பாட்டின் "முன்னுதாரணப் பாத்திரங்கள்"**

1. *சபையின் வழிகாட்டிகளுக்குரிய தகுதிகளை எல்லாக் கிறிஸ்தவர்களும் அடைய முயற்சி செய்ய வேண்டும்.*
2. *அவர்கள் இயேசுவைப் போலவே ஊழியம் செய்யும் - முன்னோடிகளாய் இருக்க வேண்டும் (லூக். 22:27).*
3. *மனிதர்கள், பர்னபாவைப் போல தாராளமாய் நிதியுதவி அளிப்பவர்களாகவும், ஆறுதல் வார்த்தைகள் கூறுபவர்களாக வும் இருக்க வேண்டும் (அப். 4:36, 37).*
4. *மனிதர்கள், பிலேமோனைப் போல் சக கிறிஸ்தவர்களுக்குத் தங்கள் இல்லங்களில் தாராளமாய் இடமளிக்க வேண்டும் (பிலே. 2) மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து, சகோதரர்களுக்குச் சிறந்த செயல்களைச் செய்ய வேண்டும் (பிலே. 10, 20).*

## வேதவசனத்தின்படி, கிறிஸ்தவப் பெண்மணி செய்யக் கூடாதவைகள் என்ன:

1. *சபை கூடுமிடத்தில் சபையாரை வழிநடத்தும் பணி செய்வது பெண்ணுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது (1 கொரி. 14:34, 35; 14:19, 23, 26, 28ஐக் காண்க). பிரசங்கியார்களே சபையில் பேச வேண்டும், எனவே கிறிஸ்தவப் பெண்மணிகள் பிரசங்கியார்களாகப் பணிபுரிய முடியாது.*
2. *ஆண்கள்மேல் அதிகாரம் செலுத்துவது பெண்களுக்குத் தடை செய்யப் பட்டுள்ளது, பெண்கள் மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ பணிபுரிய முடியாது (1 தீமோ. 2:12; 3:2).*
3. *பெண்கள் தமது கணவரின் அதிகாரத்தை மறுப்பவர்களாய்க் காணப்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது (1 கொரி. 11).*

## வேதவசனத்தின்படி, கிறிஸ்தவப் பெண்மணி செய்யக் கூடியவைகள் என்ன

1. *ஆண்கள்மீது அதிகாரம் செலுத்தாத வகையில் உள்ள செயல் பாடுகளில், வழிநடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுச் செயல்படுவது பெண்களுக்குத் தடை செய்யப்படுவதில்லை.*
2. *மற்ற பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் போதிப்பது அவளுக்குத் தடை செய்யப்படவில்லை. சில சூழ்நிலைகளில் அவள் ஆண்களுக்குப் போதிக்கவோ அல்லது போதனையில் உதவி செய்யவோ அவளுக்குத் தடையில்லை (அப். 18:24-28; தீத்து 2:4-5).*
3. *தனி நபர்களைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தும் சொந்த ஊழியத்தைச் செய்வதற்கு அவளுக்குத் தடையில்லை.*
4. *வேதவசனத்தின்படியான எந்த ஒரு பணியையும் சபைக்கென்று நிறைவேற்றி, அதன்மூலம் ஊதியம் பெறுவதற்குக் கூட அவளுக்குத் தடை விதிக்கப்படவில்லை.*

**பெண்களுக்கு புதிய ஏற்பாட்டின் "முன்னுதாரணப் பாத்திரங்கள்"**

1. *இயேசுவுடன் கூடச் சென்று அவரது போதனைக்கு பொருளா தார முறையில் உதவி செய்த பெண்கள் (மத். 27:55; லூக். 8:1-3).*
2. *லாசருவின் சகோதரியாகிய மரியாள், இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, கர்த்தருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள் (லூக். 10:39, 42).*
3. *மகதலேனா மரியாள், இயேசுவுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்துப் பின்பற்றினாள், உயிர்த்தெழுந்த கர்த்தரைப்பற்றி மற்றவர்களுக்குக் கூற ஆவலுள்ளவளாயிருந்தாள் (யோவா. 20:1-18).*
4. *தொற்காள் அல்லது தபீத்தாள் என்பவள் "நற்கிரியைகளையும், தருமங்களையும்" மிகுதியாய்ச் செய்துவந்தாள் (அப். 9:36).*
5. *பெபேயாள் என்பவள் "சபையின் ஊழியக்காரியாக" இருந்து, பவுலுக்கு உதவியாய் செயல்பட்டாள் (ரோமர் 16:1-2).*
6. *பிரிஸ்கில்லாள் என்பவள் ஒரு உண்மையுள்ள மனைவியாகவும், அப்போஸ்தலரின் உடன் ஊழியக்காரியாகவும், ஒரு ஊழியக் காரியாகவும் செயல்பட்டாள். அவள் தனது கணவருடன் இணைந்து தனது சொந்த வீட்டிலே சபையை நடத்துவதில் உதவியாயிருந்தாள். (ரோமர் 16:3-5; அப். 18:1-3, 24-28 ஆகியவற்றைக் காண்க.)*

**மூப்பர்கள் எப்படியிருக்க வேண்டும்,**
**எல்லாக் கிறிஸ்தவர்களும் எப்படியிருக்க வேண்டும்**

| **மூப்பர்கள்** | **பண்புகள்** | **எல்லாக் கிறிஸ்தவர்கள்** |
|---|---|---|
| *1 தீமோ. 3:2* | *நிந்திக்கப்படாதவர் (குற்றம் சாட்டப்படாதவர்)* | *1 தீமோ. 5:7; 6:13* |
| *1 தீமோ. 3:2* | *கட்டுப்பாடுள்ளவர் (ஜாக்கிரதையுள்ளவர்)* | *1 பேது. 1:13; 4:7; 5:8* |
| *1 தீமோ. 3:2* | *எச்சரிக்கை உணர்வுள்ளவர் (தெளிந்த புத்தியுள்ளவர்)* | *தீத்து 2:2, 5; ரோமர் 12:3* |
| *1 தீமோ. 3:2* | *உபசரிக்கும் தன்மையுள்ளவர்* | *ரோமர் 12:13; எபி. 13:2* |
| *1 தீமோ. 3:2* | *போதிப்பதில் வல்லவர்* | *எபி. 5:12* |
| *1 தீமோ. 3:3* | *மது அருந்தாதவர் (குடிகாரராயில்லாதவர்)* | *தீத்து 2:3; எபே. 5:18* |
| *1 தீமோ. 3:3* | *சாந்தமுள்ளவர் (பொறுமையுள்ளவர்)* | *பிலி. 4:5; கொலோ. 3:12, 13; தீத்து 3:2* |
| *1 தீமோ. 3:3* | *போராடாதவர் (சண்டை பண்ணாதவர், கலகம் செய்யாதவர்)* | *யாக். 4:2; 2 தீமோ. 2:24* |
| *1 தீமோ. 3:3* | *பண ஆசை இல்லாதவர்* | *1 தீமோ. 6:10; 2 தீமோ. 3:2* |

| மூப்பர்கள் | பண்புகள் | எல்லாக் கிறிஸ்தவர்கள் |
|---|---|---|
| *1 தீமோ. 3:4* | *நல்லொழுக்கமும், கீழ்ப்படிதலுமுள்ள பிள்ளைகளையுடையவர்* | *எபே. 6:1-4* |
| *1தீமோ. 3:7* | *புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவர்* | *1 பேது. 2:12-16* |
| *தீத்து 1:8* | *நீதிமான் (நேர்மையுள்ளவர்)* | *கொலோ. 4:1* |
| *தீத்து 1:8* | *பக்தியுள்ளவர் (பரிசுத்தவான்)* | *எபே. 4:24; 1 தீமோ. 2:8* |
| *தீத்து 1:8* | *இச்சையடக்கம் உள்ளவர் (கட்டுப்பாடுள்ளவர்)* | *கலா. 5:23* |

---

*எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இருக்கத் தேவைப்படாத மூன்று பண்புகள் மூப்பர்களிடம் இருக்க வேண்டும். மூப்பர், "ஒரே மனைவியை உடைய புருஷராகவும்" "விசுவாசமுள்ள பிள்ளைகளை" உடையவராகவும், "புதிதாய் மனந்திரும்பினவராய்," இல்லாமல் (1 தீமோ. 3:2, 6; தீத்து 1:6) இருக்க வேண்டும். (திருமணம் முடித்த கிறிஸ்தவர் ஒரே கணவன்/மனைவியை உடையவராய் இருக்கும் அதே வேளையில், திருமணம் முடிக்காத ஆணும் அல்லது பெண்ணும் கூட கிறிஸ்தவராகலாம்).*